1987 ஏப்ரல் 3]

மதுரை அருப்புக்கோட்டை சாலையில் ரெயில்வே மேம்பாலம்.

275—(*வினா எண். 9702)—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை B-3 காவல் நிலையம் அருகில் அருப்புக் கோட்டை சாலையில் ரெயில்வே மேம்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை அருப்புக்கோட்டை சாலையில் கி. மீ. 1/6-ல் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ஒப்பந்த காரர்களுக்கு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மதுரை மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான, இந்த அருப்புக்கோட்டை சாலையிலே மேம்பாலம் கட்டுகின்ற பணியை அரசு மேற்கொண்டதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மதுரை மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் முக்கியமான அந்த ரயில்வே மேம்பாலம் எவ்வளவு விரைவில், எவ்வளவு கால அளவில் கட்டி முடிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதை விரைவுப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும். கால அளவைச் சொல்வதற்கு இயலாது.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது விரைவில் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அங்கு நடக் கின்ற வேலையைப் பார்க்கும்போது இன்றும் போக்குவரத்து இடைஞ்சலாக இருக்கின்றது. பை-பாஸ் வழியாக போக்கு வரத்தை டைவர்ஷன் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிவதோடு, அந்த வேலை நடக்கின்றபோது, ஒப்பந்தக்காரர் களுக்கு, பி.டபிள்யூ.டி. மூலமாக, இன்ஜினியர்கள் அந்த கான்க்ரீட் போடுவதை சோதித்துப் பார்ப்பதற்கு, தனியாக என்ஜினீயர்களை நியமித்து, அவர்களுக்கு ஆலோசனை கூற தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற் கனவே என்னிடத்திலே நேரடியாக சொல்லப்பட்டதன்பேரில், போக்குவரத்தை மாற்றிவிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி அங்கே கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தனியாக, அதற்கு என்ஜினீயர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டிருக் கிறார்கள். அதுபற்றி தனியாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

திரு. ஆ. சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை சாலையிலே அமைக்கவிருக்கின்ற மேம் பாலத்தின் கீழ்ப் பகுதியில் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் எண்ணம் அரசிற்கு உள்ளதா என்பதை அறிந்துகொள்வதோடு, அது எந்த அடிப்படையில் விடப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதலிலே பாலம் கட்டட்டும். பிறகு கடைகள் வாடகைக்கு விடுவதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் அவசர, அவசியமான, மதுரை கோட்ஸ் சாலைக்குப் பக்கத்திலேயும், ரயில்வே நிலையத்திற்குப் பக்கத்திலேயும் உள்ள ரயில் பாதையில் மேம்பாலம் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது தனிக் கேள்வியாக வந்தால் சரியாக இருக்கும். இருந்தாலும், உறுப்பினருடைய கருத்துக்களை வைத்து அது என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை—மதுரை நெடுஞ்சாலையில், அருப்புக்கோட்டைக்கு அருகாமையில் ஒரு ரயில்வே மேம்பாலம் இருக்கிறது. அந்த பாலம் மழையினால் பாதிக்கப்பட்டு ஆபத் தான நிலையில் இருக்கிறது. அதில் பல விபத்துக்கள் நடந் திருக்கின்றன. ஆகவே, அந்தப் பாலத்தை மேம்பாடு செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவர் சொல்லியதை வைத்துத்தான் இந்தப் பாலத்தைப் பற்றி என்னால் புரிந்துக்கொள்ள முடிகிறது. அதற்குண்டான விளக்கம் எதுவும் தற்போது என் கையில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டாலோ அல்லது நேரில் சொன்னாலோ, அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

(முற்பகல் 11—00)

திரு. மு. மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற பணி இன்னும் எப்படியும் ஓராண்டாவது நடைபெறும். அதுவரை போக்குவரத்து நெருக்கடி இச்சாலையில் அதிகமாக இருக்கும். மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை சாலை வழியாகத்தான் மதுரை விமான நிலையத்திற்கும் செல்ல வேண்டும். எனவே, இவற்றையெல்

1937 ஏப்ரல் 3]

லாம் கருத்தில் கொண்டு திருப்பரங்குன்றம், அவனியாபுரம் இடையிலே உள்ள புறவழிச் சாலையையும், அதைப்போல வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து சின்னஅனுப் பானடி, சிந்தாமணி வழியாக அருப்புக்கோட்டை நெடுஞ் சாலையை இணைக்கின்ற புற வழிச்சாலையையும் செப்பனிடு கின்ற பணியையும், விரிவாக்குகின்ற பணியையும் மேற்கொள்ள அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று வழி ஏற்படுத்துகிறபோது அந்த வழி சீராக அமைக்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுறுத்தலாம்.

அரசு பேருந்துகளில் முதல் உதவிப் பெட்டி

276—(* வினா எண் 10166)—திரு ஜி.கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பேருந்துகளில் முதல் உதவிப்பெட்டி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெருநகர் பேருந்துகள் தவிர ஏனைய போக்குவரத்துக் கழக அனைத்து பேருந்துகளிலும் முதல் உதவிப்பெட்டி உள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

விருத்தாசலம் நகராட்சியில் நகரப் பேருந்து

277—(*வினா எண். 10792)—திரு ஆர். தியாகராாசன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் நகரப்பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்கு கோரிக்கை ஏதும் வரப் பெறவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.